**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**
**------**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

Calender

Miscellaneous Case No. CC37/2019
Priliminary Register

Sessions

Prosecution PW1
Deposition of witness for
Defence

Court

| | |
|---|---|
| Name | :Nedunjellian |
| Father's Name | :Maruthappa Thevar |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **01.03.2021.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் ரெட்டியார்பட்டி என்ற கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். ஆஜர் எதிரிகள் பாண்டியம்மாள், மருது, முத்துமணி என்ற முத்துமாரி மற்றும் பழனியாண்டி ஆகியோர்கள் ஆவார்கள். ஆஜர் எதிரிகள் பாண்டியம்மாள், முத்துமணி என்ற முத்துமாரி எனது தங்கை ஆவார்கள். மருது மற்றும் பழனியாண்டி ஆகியோர்கள் எனது மச்சினன் ஆவார்கள். எனது அப்பா மருதப்பத்தேவருக்கு திருமால் கிராமத்தில் சுமார் 6ஏக்கர் 54செண்ட் நிலம் இருந்தது. மொச்சிக்குளம் என்ற கிராமத்தில் எனது அப்பா பெயரில் காரைவீடும் காலிமனையும் இருந்தது. எனது அப்பா 2008ம் ஆண்டு இறந்துவிட்டார். எனது அக்கா காந்திமதி பாகப்பிரிவினை வழக்கு தொடுத்தார். தர்மலிங்கம் எனது தம்பி ஆவார். எனது தம்பி மேற்படி நிலங்கள் ஆகியவற்றை வைத்துக்கொண்டு எங்களுக்கு தராத

காரணத்தினால் நானும் மற்றும் 4பேர் ஆகிய காந்திமதி, பாண்டியம்மாள், முத்துமணி என்ற முத்துமாரி, முருகேஸ்வரி ஆகியோர் சேர்ந்து வழக்கு தொடுத்தோம். மேற்படி வழக்கில் தீர்ப்பு ஆகிவிட்டது. மேற்படி பாகப்பிரிவு தீர்ப்பின் நகல் மசாஆ 1 ஆகும்.(ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). 20.01.2016ல் முருகேஸவரி, காந்திமதி, முத்துமணி என்ற முத்துமாரி ஆகியோர் என்னிடமிருந்து ரூபாய் 5லட்சம் பெற்றுக்கொண்டு அவரவர் பாகங்களை எனக்கு எழுதிக்கொடுப்பதாக நம்பவைத்து உறுதி கூறினார்கள். மற்றும் ரூ.5லட்சத்தை மேற்படி காந்திமதி பாண்டியம்மாள் முருகேஸ்வரி, முத்துமாரி ஆகியோர் பெற்றுக்கொண்டார்கள் அதற்கான 20.01.2016 தேதியிட்ட பணப்பற்று ரசீது மசாஆ 2 ஆகும். ஆனால் இன்றுவரை மேற்படி நிலததை எனக்கு எழுதித்தரவில்லை. மேற்படி எனது அக்கா காந்திமதி எனக்கு 15.07.2016ம் தேதி அவருக்கு இருந்த நிலத்தின் உரிமையை எனக்கு எழுதிக்கொடுத்துவிட்டார். 25.06.2016ம் தேதி பாண்டியம்மாள், முருகேஸ்வரி மற்றும் முத்து என்ற முத்துமாரி ஆகியோருக்கு மேற்படி நிலத்தை எழுதிக்கொடுக்க மறுத்ததால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். மேற்படி 25.06.2016 வழக்கறிஞர் அறிவிப்பு மசாஆ 3 ஆகும். வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்று மேற்படி முருகேஸ்வரி மட்டும் அவருடைய பாக உரிமையினை 04.07.2016 அன்று எழுதிக்கொடுத்துவிட்டார். முத்து என்ற முத்துமாரி 11.07.2016ம் தேதி அன்று எனக்கு ஒரு பதில் அறிவிப்பினை அவர் அனுப்பினார். மேற்படி பதில் அறிவிப்பு மசாஆ 4 ஆகும். 15.12.2016ல் திருநெல்வேலி மாவட்டம் பெருமாள்புரத்தில் உள்ள காவல் நிலையத்தில் பாண்டியம்மாள் மற்றும் முத்து என்ற முத்துமாரி மீது நான் நிலம் எழுதிக்கொடுக்க கோரி எழுத்து பூர்வமான புகார் கொடுத்தேன் அந்த புகாரினை ஏற்று பெருமாள்புரம் காவல் நிலையத்தில் புகார் ஏற்பு ரசீது வழங்கினார்கள். அந்த புகார் ஏற்பு ரசீது மசாஆ 5 ஆகும். 12.06.2017 அன்று நானும் கூலி ஆட்கள் இசக்கி மற்றும் முத்துக்குமார் ஆகியோர் திருமால் கிராமத்தில் உள்ள தோட்டத்திற்கு சென்றோம். அங்கு பாண்டியம்மாள், மருது, பழனியாண்டி, முத்து என்ற முத்துமாரி ஆகியோர் என்னை நிலத்திற்குள் நுழைய விடவில்லை. மேற்படி 4பேரும் சேர்ந்து என்னை வெளியில் சொல்ல முடியாத அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள். பின்பு அங்கு பிரச்னை நடந்தது. அதனால் நான் கூடங்கோவில் காவல் நிலையத்திற்கு சென்றேன். அங்கு காவலர் யாரும் இல்லை நீங்கள் கோர்ட்டிற்கு சென்று பார்த்துக்கொள்ளுங்கள் என்று

சொல்லிவிட்டார்கள். 13.06.2017 அன்று மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு புகார் அனுப்பினேன். அந்த புகார் நகல் மசாஆ 6 ஆகும். பின்பு கூடக்கோவில் காவல் நிலையத்திற்கும் மற்றும் மாவட்ட துணைகண்காணிப்பாளர் அவர்களுக்கும் பதிவு தபால் மூலம் புகார் அனுப்பினேன். மேற்படி புகார்களின் ரசீதுகள் மசாஆ 7 (3எண்ணம்) ஆகும். மேற்படி கூடக்கோவில் காவல் நிலையத்தில் புகாரை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை மசாஆ 8 ஆகும். திருமங்கலம் காவல் துறை துணைகண்காணிப்பாளர் புகாரினை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை மசாஆ 9 ஆகும். மற்றும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம் புகார் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை மசாஆ 10 ஆகும். எனவே ஐயா அவர்கள் மேற்படி எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.